Elementary School Teachers

*52. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether the District Educational Officer, Mayuram cancelled any of his orders upgrading elementary school teachers of secondary grade working in higher grade posts during the academic year 1968-69 and 1969-70 ; and

(*b*) if so, the reasons for such cancellations ?

தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1968-69, 1969-70-ஆம் கல்வி ஆண்டுகளில் துவக்கத் தரப் பதவிகளில் பணிபுரியும் இடைநிலைத் தரத்தைச் சேர்ந்த தொடக்கப் பள்ளி ஆசிரியர் பதவிகளைத் தரம் உயர்த்துவதற்கான தனது ஆணைகளை மாயூரம், மாவட்ட கல்வி அதிகாரி ரத்து செய்தாரா ?

(இ) ஆமெனில், அவ்வாறு ரத்து செய்ததற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம். பதினொரு ஆசிரியர்களுக்குப் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் 1968-இல் ரத்து செய்யப்பட்டன. ஆனால், 1969-70-இல் அத்தகைய நேர்வுகள் எவையும் இல்லை.

(இ) மாவட்ட வாரி பணி மூப்பு நிலையைக் கருதிப் பார்க்கையில், அந்தப் பதினொரு ஆசிரியர்களும் மொத்தப் பணியில் மற்றவர்களுக்கு இளநிலையாளர்களாய் இருப்பதாகத் தெரியவந்தது.

Statue of Raja Raja Chola

*53. *Q.*—THIRU A.R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that the Government of India have given permission to install the statue of Raja Raja Chola in the Brahadeeswara Temple, Thanjavur ; and

(*b*) if so, when it is proposed to be installed ?

இராச இராச சோழனின் சிலை

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர், பிரகதீஸ்வரர் கோயிலில் இராச இராச சோழனின் சிலையை நிறுவுவதற்கு இந்திய அரசு அனுமதி அளித்துள்ளதா ?

(இ) ஆமெனில், எப்பொழுது நிறுவ உத்தேசித்துள்ளது ?